DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 68/2024

Prosecution witness PW - 2

| | | |
|---|---|---|
| Name | …. | வசந்தா |
| Husband/Father's Name | .... | மூர்த்தி |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 27th day of January 2026.

(எதிரிகள் ஆஜர்)

**<u>முதல் விசாரணை</u>**

நான் முனுகபட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் வெங்கடேசன், சுரேஷ், ஜெகன் மற்றும் தரணி ஆகியோர்களை தெரியும். எதிரிகள் வீட்டில் தான் என் பையன் மகேஷ்வரன் என்பவர் பாவு வாங்கி வந்து கூலிக்கு வேலை செய்து வந்தார். கடந்த 04.03.2023 அன்று மாலை 6.00 மணிக்கு என் மகன் சேலை எடுத்துக்கொண்டு வெங்கடேசன் வீட்டிற்கு சென்றார். அதற்கு வெங்கடேசன் என்பவர் என் மகனை செருப்பால் அடிப்பதாக சொன்னார். நான் என்ன தவறு செய்தேன், என்னை செருப்பால் அடிப்பீர்கள் என்று கேட்டார். என்னிடம் கடன் வாங்கியதால் செருப்பால் அடிப்பதாக சொன்னார்கள். ஜெகன் என்பவர் கழுத்தை பிடித்துகொண்டு அடித்ததாக என் மகன் வீட்டிற்கு வந்து சொன்னார். வாயில் ரத்தம் வந்தது, எலும்பு பகுதியில் வலி இருப்பதாக சொன்னார், மூக்கிலும் வலி இருப்பதாக சொன்னார். எதுவாக இருந்தாலும் காலையில் கேட்கலாம் என்று என் மகனிடம் சொன்னேன். அதற்கு என் மகன் கடனுக்காக என்னை அடித்துவிட்டார்களே எனக்கு அவமானகாக உள்ளது என்று வீட்டிற்கு உள்ளேயே அழுது கொண்டு இருந்தார். அதன்பிறகு எங்கள் தெருவில் உள்ள மாரியம்மன் கோயில் அருகில் அமர்ந்திருந்தார். நான் பால் கறந்து,

வாங்குவதற்காக பால்காரர் வந்தார், அவரிடம் பாலை கொடுத்துவிட்டு வருவதற்குள் மாரியம்மன் கோயிலில் என் மகன் ஆள் இல்லை. கூட்டு ரோடு மற்ற இடத்தில் தேடி கிடைக்காததால், கழனியிடம் சென்றேன். கழனியிடம் சென்று பார்த்தபோது அங்கு ஆள் இல்லை. பின்பு பிரதோஷம் என்பதால் சிவன் கோயிலுக்கும் சென்று பார்த்தேன், அங்கும் ஆள் இல்லை. நான் இரவு 1.30 மணிவரை தேடி பார்த்தேன், என் மகன் கிடைக்கவில்லை. சுமார் காலை 5.00 மணியளவில் பால் கறந்து வைத்துவிட்டு, தேடுவதற்காக கழனிக்கு சென்றேன். அவ்வாறு போகும்போது தான் லோகநாதன் என்பவர் எங்கு செல்கிறேன் என்று கேட்டார், அதற்கு என் மகனை தேடி செல்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் யாரோ ஒருவர் முள்ளு செடியில் உட்கார்ந்து உள்ளதாக சொன்னார். அங்கு சென்று நான் பார்த்தபோது என் மகன் உட்கார்ந்தநிலையில் தூக்கு போட்டு இருந்தார். நான் அங்கேயே அழுதுகொண்டு கீழே விழுந்துவிட்டேன். நான் அங்கு அழுது சத்தம் போடவே அருகில் உள்ளவர்கள் வந்துவிட்டார்கள். நான் சென்று கயிற்றை அவிழ்கவும் என் மகன், என் மீது சாய்ந்துவிட்டார். ஓரகத்தி மகன் ராமதாஸ், கோவிந்தராஜ் ஆகியோர் என் மகனை கரை மீது படுக்கவைத்தார்கள். அதன் பிறகு பெரணமல்லூர், காவல் நிலையத்திற்கு தகவல் அறிந்து அங்கு வந்துவிட்டார்கள். புகைப்படம் எடுத்து, கயிற்றை கைப்பற்றினார்கள், அதனை கோணியில் போட்டுஎடுத்து சென்றார்கள். அதன்பிறகு பிரேத கூறாய்வுக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு எடுத்துசென்றார்கள், உடல் கூறாய்வுக்கு பின்பு என் மகனின் உடலை எங்களிடம் ஒப்படைத்தார்கள். இது சம்பந்தமாக என் மருமகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். என்னிடம் போலிசார் விசாரணை செய்தார்கள்.

**<u>1, 2, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு இரண்டு மகள் மற்றும் ஒரு மகன் என்றால் சரிதான். ஒரு மகள் விமலா மற்றொருவர் தமிழ்செல்வி, இருவரும் திருமணம் செய்து கொடுத்துவிட்டோம். என் மகன் எவ்வளவு நாட்களாக வெங்கடேசனிடம் தறி நெய்து வருகிறார் என்றால் என் கணவர் காலத்தில் இருந்து நெய்து வருகிறார். எங்கள் வீட்டில் இரண்டு தறி உள்ளதால் பாஸ்கர் என்பவரிடமும் தறி நெய்து வருகிறோம். என் மகனின் இறப்பிற்கு இரண்டு மகளும் வந்து இருந்தார்கள். அதேபோல சம்பவம் குறித்து காவல் நிலையம் மற்றும் மருத்துவமனைக்கு வந்து இருந்தார்கள். அதேபோல என் மகள்கள் மற்றும்

மருமகன்களிடம் போலிசார் விசாரணை செய்தார்கள். இந்த சம்பவத்திற்கு முன்பாக மூன்று மாதத்திற்கு முன்பு சுமார் 10 நாட்கள் ஆட்டோ ஓட்ட சென்றார். அந்த நாட்களில் பாவு மற்றும் நூல் ஆகியவற்றை நான் தான் வெங்கடேசனிடம் வாங்கினேன். நான் முன்பணம் வாங்கினேன் என்றால் ஒருமுறை ரூ.10,000/- வாங்கினேன். மேற்படி கணக்கிற்காக எங்களிடம் ஒரு நோட்டும், வெங்கடேசனிடம் ஒரு நோட்டும் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் அந்த நோட்டை கேட்கவில்லை, நாங்களும் காட்டவில்லை. நான் என் மகனை கண்டு பிடித்து அவர் கழுத்தில் உள்ள கயிற்றை அவிழ்க்கும் போது காலை 6.00 மணி இருக்கும், அதன் பிறகு போலிசார் 10 நிமிடத்தில் வந்துவிட்டார்கள். அதன்பிறகு போலிசார் என் மகன் தூக்கிற்கு பயன்படுத்திய கயிற்றி கைப்பற்றி, சீனுவாசன், மனோகரன் ஆகியோரிடம் கையொப்பம் வாங்கினாாகள். போலிசார் விசாரணை அரை மணி நேரம் இருந்தது என்றால் சரிதான். அதன்பிறகு அரை மணி பிறகு எதிரிகளை போலிசார் அழைத்து சென்றார்கள். சென்னைக்கு மகன் ஆட்டோ ஓட்ட சென்றபோது பொங்கலுக்கு மூன்று நாட்கள் முன்பு பாவு மற்றும் நூல் ஆகியவற்றை நான் வெங்கடேசனிடம் வாங்கி வந்தேன். என் மகன் வீட்டிற்கு வந்து அழுத பிறகு வெங்கடேசன் என்பவர் என் வீட்டிற்கு சுமார் 8.00 வந்தார் என்றால் சரிதான். அப்போது நான், மருமகள், ராமதாஸ் மற்றும் மனோகர் இருந்தோம் என்றால் சரிதான். எந்த கடனாக இருந்தாலும் அதை நான் திருப்பி செலுத்தப்போகிறோம் என்று என்னுடன் என் மருமகளும் கேட்டோம். இது சம்பந்தமாக 15 நிமிடம் பேச்சு வார்த்தை இருந்தது. அதன் பிறகு வெங்கடேசன் என் மகனை தேடினார்கள். வெங்கடேசனிடம் முன் பணம் வாங்கி என் மகள் தமிழ்செல்வி என்பவருக்கு கொடுத்தது உண்டா என்றால் இல்லை. என் மகன் ரூ.34,000/- தறி நெய்த கடன் வெங்கடேசனிடம் இருந்தது. இது சம்பந்தமாக பேசிவிட்டு வெங்கடேசன் சென்றுவிட்டார். அதேபோல எங்களிடம் உள்ள நோட்டிலும், வெங்கடேசனிடம் உள்ள நோட்டிலும் ரூ.34,000/- தறி நெய்த கடன் உள்ளது. சம்பவத்திற்கு முன்பு என் மருமகள் அவர் அம்மாவீட்டிற்கு சென்றாரா என்றால் அது குடும்ப சண்டையில் சென்றார். எங்கள் ஊரில் நியாய விலை கடையில் வேலை செய்யும் மூர்த்தி என்பவரிடம் இதேபோன்று தறி மற்றும் நூல் சம்பவந்தமாக மூர்த்தியிடம் தான் தூக்கு மாட்டிக்கொள்வேன் என்று என் மகன் சொன்னான் என்றால் அதுபற்றி தெரியாது. என் மகன் கத்தி எடுத்துக் கொண்டு செல்வராஜ் என்பவரிடம் தகராறு செய்து ஊர்காரர்

சமாதானம் செய்தார்கள் என்றால் சரியல்ல. என் ஊரில் உள்ள சுந்தரமூர்த்தி என்பவரிடம் பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. ஊரில் உள்ள கோயில் மேல் ஏறி தற்கொலை செய்வதாக மிரட்டி போலிசார் இறக்கிவிட்டார் என்றால் சரியல்ல. வெங்கடேசனிடம் நான் எந்த கடனுக்காக அடித்தீர்கள் என்று கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை. என் மகன், நான் சண்டையிட்டதாலும், என் மகள் தமிழ்செல்விக்கு ரூ.11,000/– யை வாங்கி கொடுத்தது தான் என் மகன் இறப்பிற்கு காரணம் என்றால் சரியல்ல. என் மகனின் தற்கொலைக்கு காரணம் என் மகனுக்கு தெரியாமல் வெங்கடேசனிடம் இருந்து பணம் வாங்கி என் மகள் தமிழ்செல்விக்கு கொடுத்தாகும், ஏற்கனவே குடும்ப பிரச்சனையினால் ஏற்பட்ட மனஉளச்சல் தான் தற்கொலைக்கு காரணம் என்றால் சரியல்ல.

**(3 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது. )**

Taken down by me in open Court and read over / interpreted to the witness in the presence of the accused and admitted by him / her to be correct.

Sd/- N.Suresh
**Assistant Sessions Judge,**
**Cheyyar.**